பண்பாட்டலுவல்கள் திணைக்கள சுற்றுநிருபம் : **2020/02**

எனது இல : NP/03/09/CMA/16
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
01.01.2020.

சம்பந்தப்பட்டவர்களுக்கு,

## இளங்கலைஞர் விருது தெரிவு - 2020

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் விருது தெரிவுகளில் 40 வயதுக்கு உட்பட்ட கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதான இளங்கலைஞர் விருதுக்கு பொருத்தமான கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடா வருடம் நடத்தப்படும் பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வில் விருதுகள் வழங்கல் வைபவம் நடைபெற்று வருகின்றது. இந்தவகையில் வடமாகாணத்தில் கலைத்துறையில் ஈடுபட்டு சாதனைகளைப் புரிந்து வரும் 40 வயதுக்கு உட்பட்ட கலைஞர்களை கௌரவிப்பதற்காக வழங்கப்படும் விருதினையே இளங்கலைஞர் விருது எனும் பதம் விளக்கி நிற்கிறது.

### தேர்வு முறை

பத்திரிகைகள் வாயிலாகவும், மாகாண மற்றும் கல்வி அமைச்சு இணைய தள வாயிலாகவும், கலாசார உத்தியோகத்தர்கள் மூலமாகவும் இளங்கலைஞர் தெரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும்.
விண்ணப்பபடிவங்கள் கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டு உரிய ஆவணங்களுடன் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
தெரிவானது துறைசார்ந்த நிபுணர்கள் மூன்று பேர் கொண்ட தேர்வுக்குழுவினால் தெரிவு செய்யப்படும்.

### போட்டி நிபந்தனைகள்

விண்ணப்பம் கோரப்படும் வருடத்திற்கு முன்னைய வருடத்தின் டிசம்பர் 31ஆம் திகதி அன்று 40 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
விண்ணப்பதாரர் வடமாகாணத்தினை நிரந்தர இடமாகக் கொண்டு இங்கு வசிப்பவராக இருக்க வேண்டும்.
விண்ணப்பங்கள் யாவும் கலாசார உத்தியோகத்தர்களினூடாகவே அனுப்பப்பட வேண்டும்.
நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.
விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
கடந்த காலங்களில் இவ்விருதினை பெற்றுள்ள கலைஞர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியாது.

விருது கோரப்படும் துறைகள்

1. சிறுகதை
2. நாவல்
3. நாடகம்
4. நாடக எழுத்துரு
5. கவிதை இலக்கியம்
6. நடனம்,
7. குறும்படம்
8. ஓவியம்,
9. சிற்பம்,
10. இசைநாடகம்
11. இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு)
12. வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம், உடுக்கு, பறை, கடம், முகர்சிங் போன்றன)
13. வாத்தியக்கருவிகள் உருவாக்கம் (தவில், நாதஸ்வரம், மிருதங்கம், உடுக்கு, பறை, போன்றன.)
14. கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடைக்கூத்து, மன்னார்ப்பாங்கு, முல்லைமோடி)
15. கிராமியக் கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்)
16. ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக் கலைத்துறைகளுக்கானவை)

மேற்படி போட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு கிடைக்ககூடியவாறு தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தருடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப படிவத்தினை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் அல்லது தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் அல்லது வட மாகாண மற்றும் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : www.np.gov.lk / www.edumin.np.gov.lk

தொலைபேசி இல. : 0212054105 / 0213202568

இ.இளங்கோவன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்

இ.இளங்கோவன்,
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடக்கு மாகாணம்.